கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கக.] பரீதாபி ஹூ மாசிமீ [பகுதி-ச.

பரிசோதனத்தொடர்.

(திருக்குறளின் பரிமேலழகருரை.)

௩உஎ. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

என்பது குறள். இதற்கு,

தன்னுயிர் நீப்பினும்,—அது செய்யாவழித் தன்னுயிர் உடம்பின் நீங்கிப்போமாயினும். தான் பிறிது இன்னுயிர் நீக்கும் வினை செய்யற்க—தான் பிறிதோரின்னுயிரை அதனுடம்பி னீக்குந்தொழிலைச் செய்யற்க. எ - று.

தன்னை அது கொல்லினுந் தான் அதனைக் கொல்லற்க வென்றது, பாவம் கொலையுண்டவழித் தேய்தலும் கொன்றவழி வளர்தலும் நோக்கி. இனித் தன்னுயிர் நீப்பினு மென்பதற்குச் சாந்தியாகச் செய்யாதவழித் தன்னுயிர் போமாயினு மென்றுரைப்பாரு முளர்; பிறர்செய்தலு மாகாமையின், அஃதுரையன்மை யறிக.
என உரை வரையப்பட்டிருக்கிறது.

இதனுள், சாந்தியாகச் செய்யாதவழி யென்று தொடங்கிப் பிறருரை கூறப்பட்டு, பிறர் செய்தலு மாகாமையின் அஃதுரையன்மை யறிக. என மறுக்கப்பட்டிருக்கிறது.

இப்பாடமே இதுவரை பதிக்கப்பட்ட பல புத்தகங்களிலும், பல ஏடுகளிலும் காணப்படுகிறது.

இப்பாடத்தில் பிற ருரையின் அநுவாத பாகத்திற்கும், அதன் மறுப்பிற்கும் பொருள் நன்கு விளங்குவதில்லையென்பது பற்றி மற்ெருரு பதிப்பில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

அதில், "சாந்தியாக" வென்பதற்கு 'தோஷநிவாரணமாக' எனவும், "செய்யாதவழி" என்பதற்குத் 'தன்னைக்கொல்லவரும் பிராணியைப் பிறரைக்கொண்டு கொலைசெய்வித்தல் முடியாதவிடத்து' எனவும், "பிறர் செய்தலு மாகாமையின் அஃதுரையன்மையறிக" என்பதற்கு 'பிறர் தன்னிமித்தம் பிறிதொன்றைக் கொலைசெய்தலும் துறவிக் காகாமையால் அஃதுரையல்லவென்றறிக' எனவும் குறிப்புரையுள் விரித்துப் பொருளுரைக்கப்பட்டிருப்பதுடன், "தன்னைக்கொல்லவரும் மிருகமாதிய வற்றைத் தான் கொன்ருற் பாவமேயன்றித் தன்னிமித்தம் பிறர் கொன்ருல் தனக்குப் பாவமில்லை; ஆதலால் அவற்றைப் பிறரால் கொல்விக்கலாம்; அவ்வாறுசெய்தல் முடியாத விடத்துத் தன்னுயிர்போகுமாறுைம் பிறிதொரு பிராணியைக் கொல்லலாகாது என்பது பிறருரையின் ருற்பரியம்." எனப் பிறருரைக்குத் தாற்பரியமும், "தன்பொருட்டுப் பிறர்செய்யுங் கொலைப்பாவம் தனக்கே வருவதாயிருத்தலால் அவ்வுரைபொருந்தாது என்று மறுத்தார்" எனப் பரிமேலழகர் மறுத்ததற்குக் காரணமும் வரையப்பட் டிருக்கின்றன.

இவ்வாறு "பிறர் செய்தலுமாகாமையின்" என்ற பாடத்தில் விளங்காத பொருளை விரித்து விளக்கியிருப்பது மிகவும் அருமையுடையதாயினும் வலிந்து கொள்ளும் பொருளுடையதாகக் காணப்படுகிறது.

அன்றியும், அப்பாடம் பரிமேலழகர் எழுதியதா? அன்று என்னும் ஐயப்பாட்டிற்கும் இடனுயிருக்கிறது.

ஏனெனில், சாந்தியாகச் செய்யாதவழித் தன்னுயிர் போமாயினும் என்னுந்தொடர் பரிமேலழகர் மறுப்பதற் கெடுத்துக்கொண்ட பிற

ருரையின் அநுவாதமாம். இதனுள், தன்னுயிர் போமாயினும் என்ற பிற்பாகம் பரிமேலழகருரையினு முண்மையால், இருவருரையினும் மேற்சொல்லும் பொருள் தம்முள் விரோதமில்லை யென்பது தோன் றக் கூட்டியுரைக்கப் பட்டதென்பது பெறப்படும்; பெறவே, தம் முரையில் வேறுபட்டெஞ்சிநின்ற "சாந்தியாக" வென்பதே மறுக் கப்படும் பொருட் கூற்றெனக் கருதல் வேண்டும். கருதவே பிறரு ரையில், குறளால் மறுக்கப்படும் கொலையை விசேடித்துரைக்கும் சாந் தியாதலே பரிமேலழகருரையால் மறுக்கப்படும் பொருளாம். அதனை மறுத்தற்குப் பிறர்செய்தலு மாகாமையின் என ஏதுக் கூறப்பட்ட மையால், தன்பொருட்டுப் பிறர் கொலைசெய்தல் ஆகுமென்பது பிற ருரையின் றாற்பரியமெனப் பரிமேலழகர் கருதினரெனல் வேண்டு மே? அங்ஙனம் கருதுவதற்கேற்ற கருவியொன்று மின்று. சாந்தி யாக வென்றதனாற் பிறர்செய்தல் என்பது துணியப்படுமெனில்? சாந்தி பிறரே செய்யவேண்டும் என்னும் நியமம்வேண்டும்! அந் நியம மின்மையால் அது பொருந்தாது. நியமமுடையதாக வைத்துக் கொள்வோமாயினும், முன் "சாந்தியாகச் செய்யாதவழி" யெனச் சொல்லானுணர்த்திய பொருளைப் பின்பு மறுக்கப்புகுவார் அங்ஙனம் செய்தலு மாகாமையின் அஃதுரையன்மை யறிக வெனச்சுட்டா னுரைப்பதே முறையாகும். அம்முறையானன்றிப் பிறர்செய்தலு மாகாமையினெனப் பிறழக்கூறார்.

அன்றியும் "சாந்தியாகச் செய்யாதவழி" என்ற பிறருரையுள் "செய்யாதவழி" என்பதற்குச் செய்யின் என்னும் வினையெச்சத்தின் எதிர்மறைப் பொருளைவிட்டு வேறு பொருள் கொள்ளுதல் பொருந் தாது.

பரிமேலழகருரையிலுள்ள "அது செய்யாதவழி"யென்பதற்குப் போலச் செய்யின் என்னும் வினையெச்சத்தின் எதிர்மறைப் பொருளே கொள்ளவேண்டும். கொள்ளவே சாந்தியாகச் செய்யாதவழித் தன் னுயிர் போமாயினு மென்று தொடங்கிய பிறருரைக்கு, சாந்தியாகச் செய்யாமை காரணமாகத் தன்னுயிர் போமாயினும் போகுக; உயிர் போகாதிருக்க வேண்டி அங்ஙனம் பிறிதின் னுயிர்நீக்கும் வினை செய் யற்க. என்பது பொருளாகும்.

ஆகவே, சாந்தியாகச்செய்தலைப் பிறர் செய்தலெனக் கொள்ளினும் அது பிறருரையாலும் ஆகாதென விலக்கப்பட்டமையால் மறுப்பிற் கிலக்காதலின்று. மறுப்பிற் கிலக்காகாதவதனை மறுப்பான் புக்குப் பிறர்செய்தலு மாகாமையால் என ஏதுக் கூறுவது விருத்தம் என்னும் பொருந்தாக் கூற்றும்.

இவ்வாறாய முறைபிறழ்ந்த பொருந்தாக் கூற்றினை நுண்மாணுழைபுலச் செல்வராகிய பரிமேழகர் கூற்றெனத் துணிதல் கூடாமையால் ஐயப்பாட்டிற் கிடனுமென வுணர்க.

இனி, மதுரைத் தமிழ்ச் சங்கத்திலுள்ள திருக்குறளுரை ஏடுகளில் ஒன்றில் "பிற செய்தலு மாகாமையி னஃதுரையன்மை யறிக" என்றெழுதப்பட்டிருக்கிறது. இவ்வேடு சுத்தப் பிரதியாகவும், பண்டிதர்கள் பரம்பரையே படித்துவந்ததாகவுங் காணப்படுகிறது. இப்பாடம் மற்றொரு சிற்றெழுத்திற் பதிக்கப்பட்ட திருக்குறட் புத்தகத்திலும் "இந்நூல் அச்சிடப்பட்ட பின்பு கிடைத்தபாடம்" என்னும் தலைப்பின்கீழ்க் காட்டப்பட்டிருக்கிறது.

இப் பாடத்திற் சாந்தியாகச் செய்யாதவழி யென்றற் றொடக்கத்திற்குக் கிரகதோட முதலியவற்றாலுண்டாகும் அபமிருத்தியு நீங்குமாறு பலியாகக்கொடுக்கும் உயிர்க்கொலையைச் செய்யாவிடின் தன்னுயிர் உடம்பினின்று நீங்குமாயினும் நீங்குக; தன்னுயிர் நீங்காமைப் பொருட்டு அங்ஙனம் உயிர்க்கொலைசெய்யற்க. என்பது பிறருரையின் றாற்பரியமெனக் கொண்டனரெனத் துணிதற் கிடனுகின்றது.

ஆகவே சாந்தியாக வுயிர்க்கொலைசெய்தல் ஒன்றே அவ் வுரையால் விலக்கப்படுவதல்லது பிறவாற்றானும் செய்யு முயிர்க்கொலைகள் விலக்கப்படாவாம். இக் குறளால் அவையு மாகாவென விலக்கற்கிலக்காதலால் அவை யொழியச் சாந்தியாகச்செய்தல் ஒன்றனையே விலக்கிற் கிலக்காக்கல் குன்றக்கூறல் என்னும் குற்றம் தங்குமென்பது கொண்டு, "பிறசெய்தலுமாகாமையின் அஃதுரையன்மையறிக" வெனப் பரிமேலழகர் மறுத்தனர் என்பது பொருந்துகின்றது. சாந்தியாகச் செய்தல் முன்பு கூறப்பட்டிருத்தலால் அதனின் வேறாய பிற

வாற்று னுயிர்க்கொலை செய்தலைப் பிறசெய்தலெனச் சுருங்கச்சொல்லி யொழிந்தனரெனக் கொள்ளுதல் பொருந்தும்.

ஆதலால் அவ் விரண்டு பாடங்களுள்ளும் பிறசெய்தலுமாகாமை யின் என்னும் பாடமே சுத்தபாடமாகக் காணப்படுகிறது.

ஆயின், தன்னை யதுகொல்லினும் தா னதனைக்கொல்லற்க வென்ற பரிமேலழகருரையுள்ளும் தன்னைக் கொல்லு மவற்றைக் கொலைசெய்தலொன்றே விலக்கப்பட்டமையாற் பிறருரைபோலப் பிற செய்தலுமாகாமையால் உரையன்றும் பிறவெனின்? தன்னையது கொல்லினும் என்னும் உயர்வு சிறப்பும்மையாற் பிறசெய்தலு மாகா தென்பது தழுவப்பட்டமையால் அக் குற்றம் வாராதெனக.

ஆதலாற் பிறசெய்தலு மாகாமையின் என்ற பாடமே ஏடெழுது வோர்க்கு நன்கு பொருள் புலப்படா தொழியப் பிறவென்னு மிடைச் சொல்லைப் பின்வரும் செய்தற்றொழிற்கு வினைமுதற் பெயரென நினைந்து அப் பெயராகிய பிறர் என்பதன் ரகரவொற்றைக் கூட்டியெ ழுதவே அது பிறர்செய்தலு மாகாமையின் எனப் பரவியதெனத் தோற்றுகின்றது.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

௳

வினைப்பகுதிவேறுபடுகை.

வினைப்பகுதிகளை வியாகரணங்களிலன்றித் தனித்தனி கூறும் நூல்களும் வடமொழியிலே இருக்கின்றன. அங்ஙனங் கூறும் நூல்கள் தென்மொழியில் இல்லை. வடமொழி வையாகரணராகிய வோபதேவர் "கவிகற்பத்துருமம்" என்னும் நூலிலே வினைப்பகுதி களை ஈறுநோக்கி வகைசெய்து வேறுபாடுங் கூறி இன்ன இன்ன ஈற்றுப்பகுதிகள் இவ்வளவு இவ்வளவு என்று தொகையுங் கூறுகின் றனர். வடமொழியிலுள்ள ஊகாராந்த வினைப்பகுதிகள் கூறி இறு

தியிலே ஊகாராந்தப் பகுதிகள் பதின் மூன்று என்று தொகையுங் கூறினர். அது போலத் தென்மொழியிலுள்ள ஊகாரந்தப் பகுதி களுக்குந் தொகை கூறப்புகின் மூன்றெனமுடிக்கலாம். அவை கூ, பூ, மூ என்பன. பிறவற்றின் தொகை கூறலரிது.

கூ என்பது வகரவுகரம் விரியப்பெற்று கூவு, கூவுதல், கூவல், கூவி, கூவ, கூவின முதலியவாயும், யகரமெய் விரியப்பெற்றுக் கூய், கூயின முதலியனவாயும் வரும். கூய் என்பதனைக் கூவி என்பதன் விகாரம் என்பாருமுளர். அன்றிக் கூப்பிடல், கூப்பிடு, கூப்பிட்டு, கூப்பிட முதலியனவாயும் வரும். "திருத்தம்பயிலுஞ் சுனைகுடைந் தாடிச் சிலம்பெதிர்கூய்" (திருக்கோவை.) கூ என்பதினின்று கூகை, கூத்து, கூப்பீடு, கூவிடை முதலிய பெயர்கள் பிறக்கும். கூவிடை - கூப்பீடு. "ஐயிரண்டமைந்த - கூவிடைப் பொழிற் கப்புறங் கழிந்த பின்" (இராமா.)

பூ, மூ என்பன பூத்தல், பூத்து, பூத்த, மூத்து, மூத்த முதலிய யனவாய் வரும். பூ என்பது தன்வினை, பிறவினை என்னும் இரு வினைக்கும் பொது. புதல், முதல் என்பன ஈண்டுத் தோன்றும் பெயரொனலுமமையும். முதல்—தலைவன். "மறைமுதலோர் தனி மாவினிழற்கீழ்" (கந்தபு.)

கூ, பூ என்பவற்றிற்கு வடமொழியிலுள்ள கு-, பூ- என் பன ஒப்பாதல் உணர்தற்பாலது. கு - ஒலித்தல். பூ - பிறத்தல்.

வே என்னும் பகுதி ககரவுகரம் விரியப் பெற்று வேகுதல், வேகுகை எனத் தொழிற் பெயராகும். இறந்த காலத்திலே முதல் குறுகி வெந்து, வெந்த, வெந்தான் முதலியனவாயும் மற்றைக் காலங் களிலே வேகின்ற, வேகுது, வேக, வேவ முதலியனவாயும் வரும். வே என்பதினின்று வேங்கை, வேது, வேவை, வேனல், வெப்பர், வெய்யோன் முதலிய பெயர்கள் பிறக்கும். வேகுது - வேகின்றது. "வேகுதேதீயதனில்" (பட்டண.) வேங்கை - பொன். வடமொழி நிகண்டிலே பொன்னின் பெயராய் வரும் தபநீயம் என்பதும் இப் பொருட்டு. தப்+அநீயம் = தபநீயம். தப் - சுடுதல், எரித்தல். அநீய - ஒரு விகுதி. வேது - வெம்மை. "வேதுகொண்டு விழையு

நெறி விரும்பி" (சேது.) வேவை - வெந்தது. "பராரை வேவை பருகெனத்தண்டி" (பொருந.) வேனல் - கோடை. "வேனன்மல்கி வெண்டேர் சென்ற" (சிந்.) வெப்பர் - வெம்மை. "வெப்பராற் றட்பமாற்றி" (சிந்.) அர் என்பது போலி என்பாருமுளர். அன்றி வெச்செனவு என்பதும் இதன் பாற்று. வெச்செனவு - வெம்மை. "தண்ணெனவும் வெச்செனவுந் தந்து" (சேதுபு.)

மே என்பது வகாவுகரம் விரியப் பெற்று மேவு, மேவுதல், மேவி, மேவ, மேவினன் முதலியனவாயும், யகரம் விரியப்பெற்று மேய, மேயின முதலியனவாயும் வரும். மே என்பதினின்று மேவினர், மேவார் முதலிய பெயர்கள் பிறக்கும். மேவு என்பதே இயற்கை முதனிலையென்றும் மேய என்பது மேவிய என்பதன் விகாரம் என்றும் கூறுவாருமுளர். தொல்காப்பியச் சொல்லதிகார வுரையிலே நச்சினார்க்கினியர் உயிரீற்று வினைப்பகுதி பதினொன்றெனக் கூறி ஏகாரவீற்றுக்கு மே என்பதனைக் காட்டி "மேவினான்" என உதாரணமுங் காட்டினர். பொருந்துமாறு நோக்கி அறிக.

ஐகாரவீற்றுப் பகுதிகளுள்ளே சில பொருணோக்கி விகுதி இரட்டி முடியும். அவை வை, அசை, கரை முதலியன. வை என்பது சபித்தற் பொருளிலே விகுதியிரட்டாது வைதல், வைது, வைய, வைதான் முதலிய வாயும், செறித்தற் பொருளிலே விகுதியிரட்டி வைத்தல், வைத்து, வைக்க, வைக்கிய முதலியனவாயும் வரும். "ஒருமேலொண்மணிச்சூட்டுவைக்கிய" (சிந்.) அசை முதலியன அசைதல், அசைத்தன் முதலியனவாய் வரும். அசைத்தல் - சார்த்துதல், (சேனாவரை.) கட்டுதல்.

பை என்பது வரல், எனல் என்னுந் துணைவினைகள் பெற்றுப் பைவரல், பைவந்து, பைவரா, பையெனல், பையென முதலியன வாய் வரும். "பையென வென்னை வினவுதி யாயின்." (புறநா.) பை என்பதினின்று பையல், பைதல், பையுள் முதலிய பெயர்கள் பிறக்கும். பைவரல் - மென்மையாதல், வருந்தல். பையுள் - துயர். வடமொழியிலே மெ்லை என்னும் பகுதியும் இதுபோலவே மெலிதல், வாடுதல் என்றும் பொருள் பயக்கின்றது.

இரை என்பது இரைதல் இரைந்து, இரைக்க முதலியனவாய் வருதலன்றி ஈறுபோய் வேறுபட்டு இரற்றல், இரற்று, இரட்டல், இரட்டு, இரங்கல், இரங்கு முதலியனவாயும் வரும். வடமொழியிலே வரும் வினைப்பகுதியாகிய ரொ என்பதும் ஒலித்தல் என்னும் பொருட்டாதல் அறிக. இரற்று, இரட்டு முதலியன பெயராயும் நிற்கும். இரையும் வேறே! இரற்று முதலியனவும் வேறே என்பாருமுளர்.

நிரை என்பது நிரைத்தல், நிரைந்து முதலியனவாய் வரலன்றி நிரல், நிரந்து, நிரம்பி, நிரம்பிய முதலியனவாயும் வரும். நிரம்பிய - நிரையான. "நிரம்பியமாடம்" (இரா.)

களை, தளை, கனை முதலியன ஈறு போய்க் கட்டல், கட்டு, கட்ப, கட்கும், தட்டல் தட்டு, தட்ப, தட்கும், கன்றல், கன்றி, கன்ற, கன்றும் முதலியனவாயும் வரும். "அடாதவான்களை கட்டனர்" (கந்தபு.) "தட்டோரம்ம விவட்டட்டோரே - தள்ளாதோரிவட்டள்ளாதோரே" (புற.) இங்கே உரைகாரர் "தட்டோர்" என்பதற்குத் "தளைத்தோர்" என்றும், "தள்ளாதோர்" என்பதற்குத் "தளையாதோர்" என்றும் உரைகூறுவர். "வான்றளை தட்டிசை தனதாகியும்" என்ற காரிகையையும் நோக்குக. களை, தளை என்பன பெயராயும் நிற்கும். கனை என்பதினின்று கன்னல், கனம் முதலிய பெயர்கள் பிறக்கும். கன்னல் - சருக்கரை. "செறிந்திடு கன்னல்." (கந்தபு.)

நொ என்னும் பகுதி நொவ்வு, நோதல் எனத் தொழிற் பெயராகும், இறந்த காலத்திலே நொந்து, நொந்த, நொந்தான் முதலியனவாய் வரும். மற்றைக் காலங்களிலே நோகின்ற, நோக, நோவ முதலியனவாய் வரும். நோவு எனப் பெயர் தோன்றும்.

து என்பது யகரம் விரியப்பெற்றுத் துய்த்தல், துய்த்து, துய்க்க முதலியனவாய் வரலன்றித் துவ்வல், துற்றல், துற்று, துற்றிய முதலியனவாயும் வரும். துற்றிய - தின்ற. "தூாய் துற்றிய துருவையும்" (பொருநா.) துற்று என்பது பெயராயும் நிற்கும். துற்று - உணவு. "முற்றுற்றுந்துற்றினை" (நாலடி.) துப்பு, துப்புரவு, துவ்வு, துற்றி முதலிய பெயர்களும் இதினின்று தோன்றும்.

போ என்பது போகல், போதால், போய், போந்து, போதா, போத, போன, போந்த, போயின முதலியவாய் வரும். போ என்பதினின்று போகல், போக்கு முதலிய பெயர் பிறக்கும். போக்கு - குற்றம்.

தமிழ்மொழி கற்போருக்குப் பயன்படுமாறு சொல்லாற்றலும் பொருளாற்றலும் பெரிதமைய வாக்கியவடிவமாகப் பல நூல்கள் செய்து வெளிப்படுத்திய ஸ்ரீமான்-ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் இவ் வினைப்பகுதிகளின் வரலாறுகளையும் ஒரு புத்தகமாகச் செய்து வெளிப்படுத்துதலை விரும்பினர். அவர் விரும்பியவாறே செய்யப்பட்டு "வினைப்பகுபதவிளக்கம்" என்னும் பெயருடன் ஒன்று அச்சிடப்படுகின்றது. இங்கே அமையாத வினைப்பகுதிகள் பல அங்கே வரும். அங்கே அமையாதனவாய் இங்கேயுஞ் சிலவரும். இவைகளை முடிவறிந்து கூறல் அரிதாயினும் அறிந்தவரை கூறி முடிப்பது நன்று.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை,

NOV 19[illegible]

சுன்னாகம்

பிழைதிருத்தம்.

—:o:—

சென்ற மார்கழிமாதச் செந்தமிழிலே சஉ-வது பக்கத்தில் "வினைப்பகுதி வேறுபடுகை" என்னும் விடயத்திலே "ஹ்ரு - (ஹா - தாங்குதல்) என்னும் பகுதி" என்றதை, ஹ்ரு (ஹா—தாங்குதல்) என்பதனைப் பரி என்பதும் எனவும், சங-வது பக்கம் ச-வது பந்தியில் கொடு என்பதனைத் தொடு எனவுந் திருத்திக்கொள்க.

தமிழ்-அகராதிவேலையின் விவரம்.

இந்த அகராதியில், தமிழ்ப்பாஷையில் வழங்கும் எல்லாச் சொற்களும், அவற்றின் எழுத்துச் சேர்க்கை, உற்பத்தி, வெவ்வேறான பொருள்களுடனும், பிரயோகங்களுடனும் ஆராய்ச்சி செய்யப்படும்.

விஷயங்களுக்கு விரிந்த விவரங்கள் காட்டிச்செல்வது, "என்ஸைக்லோபீடியா" போன்ற நூல் முறைக்கே உரியதாம். ஆதலால், பதப்பொருள்களையே பெரும்பான்மை விளக்குதற்குரிய அகராதி முறைக்கு அவ்விவரங்கள் ஏற்றன ஆகா.

இவ்வகராதி சித்தப்படுத்துவதில் எங்கள் நோக்கங்கள் அடியில் வருமாறு:—

(a) தற்காலத்தில் கிடைக்கக்கூடிய நூல்கள் முதலிய சாதனங்களை நன்கு ஆராய்ச்சிசெய்து அவற்றை உபயோகித்தல்.

(b) இதுவரை கிடைக்கப்பெறாத கையெழுத்துப் பிரதிகளிற் கண்ட அருஞ்சொற்களைச் சேர்த்தல்.

(c) இதுகாறும் கவனிக்கப்படாதிருந்த பழைய உயர்தரக் காவியங்களினின்றும் பொருள்களை விளக்கிக்காட்டுதல்.

(d) தவறாகக்கண்ட பொருளமைதிகளைத் திருத்தஞ்செய்தல்.

(e) தமிழ் நாட்டாரது தற்காலப் பேச்சு வழக்கில் உள்ள புதிய பதங்களைச் சேர்த்துக்கொள்ளுதல் - என்பவைகளாம்.

மேற்கூறியவற்றைச் செய்துமுடிப்பதில் தமிழ்ப்பண்டிதர் அனைவரும், தமிழ்ப்பாஷையின் அபிவிர்த்திகருதி ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களும் ஒத்துழைத்து, இவ்வரியபெரியகாரியத்தை நிறைவேற்றிவைக்க விரும்புகிறோம்.

இவ்வாறு உதவிவேண்டி, மதுரை, தஞ்சை, சிதம்பரம், சென்னை, யாழ்ப்பாணம் - இந்நகரங்களிலுள்ள தமிழ்ச்சங்கங்களையும், பாளையங்கோட்டைச் சைவசபையையும், தத்தம்பக்கங்களில் வழங்கும்

கீழ்க்குறித்த விஷயங்கள் பற்றிய பதங்களை, அவற்றின் சரியான பொருள் விவரங்களுடன், சேகரித்து எங்கட்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் அவ்விஷயங்களாவன:—

(1) ஜாதிகளும் அவற்றின் வெவ்வேறு உட்பிரிவுகளும், வழங்கும் விசேடபதங்கள்.

(2) குலாசாரங்கள், அவ்வவ் இடங்கட்குச் சிறப்பாகவுள்ள வழக்கங்கள்.

(3) தொழில்கள், ஆயுதவகைகள், பாத்திரங்கள் முதலியன.

(4) மருத்துவமுறைகள், மூலிகைகள் முதலியன.

(5) சங்கீத சம்பந்தமாகவும், ஏனைய சாஸ்திர சம்பந்தமாகவும் உள்ள விசேஷபதங்கள்.

(6) மதங்களின் பல்வகை விரதாநுஷ்டானங்கள், மதக்கொள்கைகள்.

(7) கையெழுத்துப் பிரதிகளிலும் மற்றவைகளிலும் கண்ட அகராதி அமைப்பிற்கு வேண்டிய ஏனைய சாதனங்கள் - என்பவைகளாம்.

இவற்றோடு, தமிழ்ப்பாண்டித்தியத்திற் சிறந்த வித்வான்கள் சிலரை, இக்கமிட்டியின் "கௌரவ - வித்வத் - அங்கத்தவர் ஆகத் தேர்ந்தெடுத்து, உரிய காலங்களில் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டுக்கொள்ளவும் தீர்மானமாயிருக்கிறது.

இவ்வண்ணமாக, வின்ஸ்லோ, ராட்லர், போப், கதிரைவேற்பிள்ளை முதலிய பண்டிதர்களால் முன்னமே செய்யப்பட்டுள்ள பெரிய காரியங்களை மேலுந்தொடர்ந்து நடத்திச் சிறப்பிப்பதில், தமிழ் நாட்டார் எல்லாரும் தங்கட்குப் பாத்தியமுள்ளதாகவே எண்ணி வேண்டிய உதவி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

மதுரை,
13. Mar. 1913.

J. S. CHANDLER,
Chairman.

வானசாஸ்திரம்.

(௯௯-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இதற்கெட்டு உபக்கிரகங்க ளிருக்கின்றனவென்றோம். அவைகள் சுற்றுங்காலங்கள் பின்வருமாறு:—

	பெயர்.	சநியின் அர்த்தவிட்ட அளவையொப்ப.	சுற்றும்நாட்கள். நாள். ம. மி. ச.
1.	மிமாஸ்	3—360	0—22—37—23
2.	என்கேல்டஸ்	4—312	1— 8—53— 7
3.	டேதிஸ்	5—339	1—21—18—26
4.	டயோன்	6—839	2—17—41 —9
5.	ரீயா	9—552	4—12—25—11
6.	டிடான்	22—145	15—22—41—25
7.	ஹைபரியன்	28—000	21— 7— 7—41
8.	ஜபேடஸ்	64—359	79— 7—54—40

முதல் நான்கு கிரகங்களும் சநிக்குச் சமீபமாய்ச் சுற்றியோடுகின்றன. கடைசியான ஜபேடஸ் என்பது நமக்குஞ் சந்திரனுக்குமுள்ள தூரத்தைக்காட்டிலும் பதின்மடங் கதிகமான தூரத்திலிருக்கின்றது. இவ் வுபகிரகத்தின் பரிமாணமோ நமது பூமியிற் பாதியிருக்கின்றது. இது சநியைச் சுற்றிவருங்காலமும் அதிகமாகவேயிருக்கின்றது. இவைகளுட்சில சுலபத்திற் கண்டுபிடிக்கக் கூடியவாயும், சில பழகியவர்களே யறியக்கூடியனவாயு மிருக்கின்றனவாம். இவைகளைத் தவிர்த்து ஒன்பதாவதாக ஒன்று பிளாக்ஸடா என்னுமிடத்திலுள்ள பிக்கரிங்காசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

பிரமந்தன், விமந்தன்.

உலகத்தாருக்கு அநாதிதொட்டுச் சூரியன், சந்திரன், பூமி, செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சநி, இராகு, கேது என்ற கிரகங்களைத் தவிர்த்தும், தாராகணங்களைத் தவிர்த்தும் வேறு கிரகங்களிருப்பதாகத் தெரியாது. இவைகளில் இராகு கேதுவிரண்டும் சாயாகிரகங்களென வராஹ மிஸிரர் முதலானோர் அநேக நூற்றாண்டுகட்கு முன்னரே தீர்மானித்துவிட்டனர். அதற்குப்பிறகு இன்னுங் கிரகங்களிருக்கின்றனவென்று சொல்வாரொருவருமில்லை. சென்ற நூற்றாண்டில் இங்கிலாந்திற் பேர்போன வானசாஸ்திரியாகிய சர் உவில்லியம் ஹெர்ஷலென்பார் ஒருநா ளிரவு-1781-ஆம் மார்ச்சுமீ 13உ சுமார் 10, 11-மணிக்கு மிதுனவிராசியைத் தமது தூரதிருஷ்டி கொண்டு சோதித்திருக்கையில் அதனிடை யொரு உருவின் கடைப்பாகம் தோற்றப்பட்டது. அதனையுற்று மறுபடிநோக்கிவருகையில் அது ஒரு கிரகமாயிருக்கவேண்டுமென்று கண்டனர். அதுமுதற் சோதித்துவருகையில், ஒரு பெரிய கிரகமாயிருந்ததோடு அதற்கு எட்டு உபகிரகங்களு மிருப்பதாகக் கண்டனர். ஆயினும் அவரைப் பின்னிட்டோர் அவைகளுள் நான்குதான் உபக்கிரகங்களென்றும், மற்றவை தாராகணங்களென்றுங் கண்டனர். இதற்கு ஆங்கிலத்தில் யூரனேஸ் என்று பெயரிட்டனர். இக் கிரகம் உருண்டை வடிவினதாயினும் இதன் சூரியவலயம் அண்டாகிருதியானது. இதன் சுழற்சியைக்கொண்டு இது ஒருதரம் ஆதித்தனைச் சுற்றிவர 84-வருடங்கள் பிடிக்குமெனக் கணக்கிட்டிருக்கின்றனர். இதன் வட்ட அளவு 33250, இது பூமியைவிட 74-மடங்கு பருமனுடையதாயினும், ஆகர்ஷண சக்திக் குறைவுடையதாயிருக்கின்றது. இதன் சுழற்சி மற்றவைகளைப்போலன்றி வக்கிரகதியுடையதாம். இதன்கதியைச் சோதித்துக் கணித்துக்கொண்டு வானத்தைத் தேடியபோது கிரகசஞ்சாரம் வேறு விதமாயிருந்தபடியால் வானசாஸ்திரிகள் பிரமித்தனர். ஆயினும் ஆடம்ஸ் என்ற ஆங்கில நிபுணரும், லெவரியே என்ற பிராஞ்சிய நிபுணரும் தனித்தனியே கணக்கிட்டு இதனை மற்றொரு கிரகம் தனது வலிமைகொண்டு இழுக்கிறதென்று சித்தாந்தப்படுத்தினர். இவர்கள் சித்தாந்தப்படுத்திக்காட்டியவிடம் ஒருவருக்கொருவர் ஒரு பாகை வித்தியாசத்திற்குள்ளிருந்தது. பிராஞ்சிய நிபுணர் தாம் கண்டு

பிடித்திருந்த இடத்தை ஜர்மன் நிபுணர்கட்கனுப்ப 1846-ம்வரு செப்டம்பர்மீ 26உ அன்று ஜர்மன் நிபுணர்களதனைப் பெற்று அன்றிரவே யதனைக்கண்டுவிட்டனர். இக்கிரகத்திற்குத்தான் நேப்தியூன் என்று பெயர் இதற்குமொரு உபக்கிரகமுண்டு. இந்தக்கிரகம் மணியொன்றுக்கு 12000-மைல் வீதம் ஆகாயவீதியிற் செல்லுகின்றதென்றால் மற்றவைகளைச் சொல்லுவானேன். நமது பூமியைவிட 105-மடங்கு பெரியதாயினும், தூரப் போகப்போகச் சலனகதி அதிகமென்னும் நியாயத்தாற்றான் வேகமதிகமாயிருக்கிறது. இவைகளின் அடி நுனி அல்லது ஒரு சுழற்சியை ஒருவனே காணுதலரிதாம். ஒன்று 84-வருடமும், மற்றொன்று அதற்குமேலுஞ் செல்லுமாயின், ஒரு புருஷாயுசு பற்றாதன்றோ. இந்த நெப்தியூன் வெறுங் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. இவ்விரண்டு கிரகங்களையும் பற்றின விவரமொன்றும் இன்னும் நன்கு வெளிப்படவில்லை.

நக்ஷத்திர மண்டலம்.

இதுவரையில் வானத்திற் றோன்றும் பெருங் கிரகங்களைப் பற்றிச் சொல்லப்பட்டது. பெருங்கிரகங்களைப் பற்றித் தெரிந்தவரையிற் சொல்லிமுடித்தோம். ஆகாசத்திற் றோன்றும் அநேக ஒளிப்பொருள்களில் எல்லாவற்றிற்கும் ஒருவழி சொல்லமுடியாவிடினும், எப்போதும் நிலைத்து நிற்பதும், சலிப்பற்றதுமான வனேக ஒளிப்பொருள்கட்கு உடுக்களென்றும் நக்ஷத்திரங்களென்றும் பெயரிட்டிருக்கின்றனர். அவற்றைப்பற்றிச் சிறிது சொல்லுவாம். அவைகளைச் சோதித்து அவைகள் இன்னவிதமா யிருக்கின்றனவெனச் சொல்லுதலியலாத காரியமாம்.

சந்திரனுடைய கலாவிருத்தியைக்கொண்டு அவற்றின்கதி கணிக்கப்பட்டிருக்கிறது. சந்திரன் செல்லும்போது நக்ஷத்திர மண்டலத்திலுள்ள குறிப்பிட்ட இருபத்தேழு நக்ஷத்திரங்களிலோ, அவற்றினிடையிலோ புலப்படுகிறான். அதனை நமது பூர்வீகர்கள் கண்டு அதனதனிருப்பிட முதலியவற்றைக் குறிப்பிட்டிருக்கின்றனர். அவைகளுட் சில ஐரோப்பிய சித்தாந்தத்திற் பழகிவருகின்றனவாயினும், எல்லாம் பழகிவருவதில்லை. அவர்கள் கொண்டாடும் அநேக நக்ஷத்

திரங்களை நாம் கையாடுவதில்லையென்பதோடு அங்குத் தென்படுபவை களெல்லாம் அக்ஷாம்ச தேசாந்தர பேதத்தால் இங்குப் புலப்படுவது மில்லை. காஸ்மீரதேசம்சென்ற நமது தென்னிந்திய ஜ்யோதிஷ ரொரு வர் அங்குச் சப்தரிஷி மண்டலம் உச்சத்திற் செல்லக்கண்டன ரென்றால் இதற்கு வேறு சாக்ஷியமும் வேண்டுமோ? இனி, தென்னிந்தியாவிற் றெரியக்கூடிய ஐரோப்பிய இந்திய தாரைகளை மாத்திரம் குறிக்கப்படும்.

நக்ஷத்திரம்.	இத்தனை என்பது.	அக்ஷாம்சம் ஓரா-பா-கலை.	தேசாந்தரம் பாகை.	ஆங்கிலப்பெயர்.
அசுவதி	6	0—8—0	10வடபுறம்	ஆல்பாஎரிடிஸ்
பரணி	3	0–20—0	12 வ	முஸ்கா
கார்த்திகை	6	1—7–30	5 வ	பிளேயாட்ஸ்
ரோகிணி	12	1–19–30	5 வ	அல்டேபிரான்
மிருகசீரிடம்	3	2—3—0	10 தென் பு.	எத்தா ஓரியனிஸ்
திருவாதிரை	1	2—7–20	9 தெ	ஆல்பா ஓரியனிஸ்
புனர்வசு	6	3—3—0	6 வ	பெதா-ஜிமினோரம்
பூசம்	5	3–16—0	0 வ	டெல்டாகான்கிறீ
ஆயிலியம்	4	3–19—0	7 தெ	கான்கிறீ
மகம்	4	4—9—0	0 வ	லியோனிஸ்
பூரம்	2	4–24—0	12 வ	ஷை
உத்திரம்	2	5—5—0	13 வ	ஷை
அஸ்தம்	6	5–20—0	11 தெ	கார்வி
சித்திரை	3	6—0—0	2 தெ	ஸ்பைகா
சுவாதி	1	6–19—0	37 வ	பூதிஸ் ஆர்க்தோரஸ்
விசாகம்	6	7—3—0	1½ தெ	லிப்ரா

அனுஷம்	6	7–14—0	3 தெ	
கேட்டை	4	7–19—0	4 தெ	
மூலம்	4	8—1—0	9 தெ	
பூராடம்	2	8–14—0	5½ தெ	
உத்திராடம்	2	8–20—0	5 தெ	
திருவோணம்	3	9–10—0	30 வ	அகுலி
அவிட்டம்	(அளவிறந்த)	9–20—0	36 வ	டெல்பினி
சதயம்	0	10–20—0	0.½ தெ	அக்வேரி
பூரட்டாதி	2	10–26—0	24 வ	பெகாஸி
உத்திரட்டாதி	2	11—3—0	26 வ	ஆந்தரோமேடா
ரேவதி	12	11–29—5	0 வ	ரெவடாபிஸியம்.

இவைகளேயன்றி அகஸ்தியரென ஒருபெரியநக்ஷத்திரம் அக்ஷாம்சம் 90-வது பாகையில் 80 பாகை தெற்காகத் தோன்றும். இந்நக்ஷத்திரம் புரட்டாசிமீத்தில் அதிகாலேயிற் றென்புறமாகப் பார்க்கின் இரண்டுமூன்று பெருநக்ஷத்திரங்கள் தோன்றுவதில் அதிக தெற்கிற் றோற்றமாகும். ஆங்கிலேயர் ஆர்கோநாவிஸ் என்னும் ஆர்கோவின் கப்பல் என்பதில் முதற்றாவுடுவாகக் கொள்கின்றனர்.

மேற்கூறிய இரண்டுமூன்று பெரியநக்ஷத்திரங்களில், அகஸ்தியருக்குச் சற்று வடகிழக்காய்த் தோன்றுவதை மிருகவியாதனெனக் கூறுவர். இது மிதுனராசிக் குரித்தானதாகையால், 2 இராசி 20-வது பாகையில் 40 பாகை தெற்காகவிருக்கிறது. சாதாரணமாகப் புரட்டாசிமீத்தி லருணோதயத்திற் றோற்றுவது புனர்வசுவென்னுந்தாரை. இது தமிழ்ச் சாத்திரப்படி புனர்பூசமாறு மோடம்போல் என்றபடி ஆறு பிரகாசமான வுடுக்கள் வானத்தின்மத்தியில் இரண்டிரண்டாக வடபுறமிருந்து தென்புறம்வரையிற் புலப்படும். இக் கூட்டத்திற் றென்புறம் பெரிதாகப் புலப்படுவதை மிருகவியாதனென்பர் வடநூலார். இதுவே ஒருக்கால் சிரியஸ் என்னும் நக்ஷத்திரமாயிருக்கக்

கூடுமென்பது பண்டித பாபுதேவசாஸ்திரி போன்றோரபிப்பிராயம். ஆங்கிலத்திற் கானிஸ்மேஜர் அல்லது பெருநாய்கள் என்று சொல்லப்படுங் கூட்டத்திற் றோன்றும் முதற்றரத் தாரையாகும். இது பூமிக்கதிக தூரத்திலிருப்பதால் சிறியதாகப் புலப்படினும் அதனொளி இராக்காலங்களிற் பிரகாசிக்கக் கூடியது. இதனைச் சூரியனுக்குச் சமானமாகக்கூடச் சொல்லலாமென்பது பூர்வகால யவனாசிரியர்களது அபிப்பிராயம். இது மற்ற சுவாதி, அநுஷம், உரோகிணி, திருவாதிரை, போல்லுயுக்ஸ் இவைகளோடு சிவந்த நிறமுடையதாக விருந்ததாகப் பூர்வயவனாசிரியர் குறித்திருக்கின்றார். இப்பொழுதோ கிரகத்திற் சநி பகவானும், சுவாதியும் அநுஷமும் சிவந்த நிறமுடையனவாகவே யிருக்கின்றன. ஊற்றுற்போலிருக்கு முரோகிணியி னடியிலுள்ள பெரிய தாரை ரோஜாப்பூ வர்ணமுடையதாக (அதாவது வெண்மை கலந்த சிவப்புடையதாக) வின்றுங் காண்கிறோம். திருவாதிரையும் பொல்சாயூக்ஸும் மஞ்சட்கலப்புடைய வெண்ணிறமாகத் தோற்றுகின்றன. சிரியஸோ சுத்த வெண்ணிறமுடையதாகத் தோற்றுகிறது. இவைகட்கு முற்பாதமுண்டோவெனின்? ஈசன் செயலே யாதென்று கூறுவது. 1572-ல் காஸியோபியாவில் சோதியினையுடைய நக்ஷத்திரமொன்று தோன்றிற்று. அதனையுற்றுப்பார்த்துவரும்போது அது வரவர நிறமாறிவரக்கண்டனர். அதுவன்றி இந் நக்ஷத்திரமண்டலங்களுஞ் சலனமுடையவெனக் கணிக்கப்பட்டாலு மவை யவ்வளவு வியக்தமாக விளங்காததோடு அதிக இடப்பெயற்சியுடையனவல்ல. இக்காரணங்களா லிவைகளி னிற மாறக் காரணமுண்டென வூகிக்கலாம்.

அக்கினி, ப்ரஹ்மஹ்ருதயம், பிரஜாபதி என்பன மூன்று நக்ஷத்திரங்கள் முக்கியமானவை. இவைகள் ரிஷப ராசியிற் றோற்றுகின்றன. அக்கினி, பிருமஹ்ருதயம் இரண்டும் 52-வது பாகையில் முறையே 8, 30-பாகம் வடக்கே தோன்றும். இவைகட்குக் கீழ்புறமாய் 5-பாகையிலுள்ள பிரஜாபதி நக்ஷத்திரம். இவை கார்த்திகைக்கும், மிருகசிரம், திருவாதிரைக்கும் மத்தியில் வடபுறமாய்ப் புலப்படும். அக்கினிக்கு ஆங்கிலத்தில் பெதாதோரி என்றும், பிரும்மஹ்ருதயத்திற்கு காபல்லா வென்றும், பிரஜாபதிக்கு ஒரிகே என்றும்

பெயர். ஐரோப்பியர்கட்கு ஓரிகாவென்பதே ஒரு நக்ஷத்திரக்கூட்டம். அரபிகளிவைகளைக் கார்த்திகையின் இரக்ஷகனெனச் சொல்வதுண்டு. படத்திலவைகள் ஒரு மனிதனொருகையில் ஆடொன்றையும், மற்றொரு கையில் இரண்டு ஆட்டுக்குட்டிகளையுந் தூக்கிக்கொண்டிருக்கும் பாவனையாகக் காட்டப்படுவதுண்டு. இந்த ஓரிசா என்பவன் இரதம் இன்னவிதமெனக்கண்டு தரகமோட்டுவதில்வல்லவனாயிருந்ததின்பொருட்டுத் தேவர்களிலொருவனானானென்றுமோர் கதை வழங்கும். இந்தக்கூட்டத்தில் பிரும்மஹ்ருதயமென்னும் காபெல்லா முக்கியமானது.

அபிஜித்தொன்று திருவோணத்திற்கு வடக்கிற்புலப்படும். இது இப்பொழுது சிரௌதிகள் பஞ்சாங்கம் முதலியவற்றில் இந் நக்ஷத்திரம் குறிக்கப்பட்டு வருகிறது. இது திருவோணத்திற்கு வடமேற்கில் நான்கு சிறு நக்ஷத்திரங்களின் உச்சியிற் பளீரெனத் தோன்றும். கீழிருக்கும் நான்கு நக்ஷத்திரங்களும் கோணலான நீண்ட சதுரப்பாடுடையதாய்த் (Romboid) தோன்றும். இதனக்ஷாம்சம் 8—26—40 வடக்கில் 60 பாகையிற்றோன்றும். இந்த நக்ஷத்திரத்திற்கு ஐரோப்பியர்கள் வேகா (Vega) எனப் பெயரிட்டிருக்கின்றனர். இக் கூட்டத்திற்கே லிரி எனப் பெயர். இந்த வேகா பிரகாசத்தில் அதிக மேன்மையுடையதென்றும் ஒரு காலத்தில் (சற்றேறக்குறைய 12000 வருடங்கட்குப் பிறகு) இதுவே துருவநக்ஷத்திரமாகத் தோற்றுமென்றும் மேல்நாட்டா ரபிப்பிராயப் படுகின்றனர். இதனைக் கண்டு பிடிப்பது அதி சுலபம். ஐப்பசிமீ”த்தில் சூரியாஸ்தமனமானவுடனுச்சியிற்றோற்றுவது முளைக்கோல்போன்ற திருவோணமாம். இதன் மத்தியிற் பிரகாசிக்கும் போகதாரகா நக்ஷத்திரம் சிகரமாயும், இதற்கு வடமேற்கிற் றோன்றும் அபிஜித்தை (வேகா) ஒரு காலாகவும் முன்னதற்கு நேர் வடகிழக்கிலும், பின்னதற்கு நேர் கிழக்கிலுந்தோற்றுமொரு ஒள்ளிய நக்ஷத்திர மற்றொரு காலாகவுங்காணலாகும். பின்னையதற்கு டெனப் என்று பெயர். இவைகளே நம் நாட்டில் முக்கியமாக வழங்குபவைகள்.

இவைகளுள் மேல்விதந்து கூறியவற்றைத் தவிர்த்து மற்றவைகளைப்பற்றி விரிவாகக் கூறுதும். அசுவினி ஆறு நக்ஷத்திரங்கள்

பளீரென நடு ஆகாயத்திற் குதிரைத்தலைபோற்றோன்றும். ஐரோப் பியர் இதனை மேஷராசியென்பர். நமக்கு மேஷவிராசிக்கு இரண்டு முழுநக்ஷத்திரங்களுண்டு. மற்றொன்று பின்வரும் பரணியாம். இது வும் ஐரோப்பியருக்குள்ள முஸ்காவாகும்.

கார்த்திகை ஆறு சிறுநக்ஷத்திரங்களஞ்சடுக்கு அலங்கார தீப மேற்றியதுபோல் மாலைப்போதில் தை மாசி மாதங்களில் மேற்கிலும் ஐப்பசி மாதத்தில் உச்சியிலும் ஆவணி மாதத்தில் வைகறையிலுந் தோன்றும்.

ஐரோப்பியரிதனைப் பிளயாட்ஸ் என்றும், இது பன்னிரண்டுடுக் கள் கொண்டதாயினும், ஆறேவெறுங் கண்ணுக்குப் புலப்படக் கூடிய வென்றும், மற்றவை தூரதிருஷ்டிகொண்டே காணக்கூடியவென்றுங் கூறுவர்.

உரோகிணி கார்த்திகைக்குச் சற்றுத் தென்கிழக்காய் ஒருகவை விரித்தது போற்றோற்றும். இதனுள் வெறுங் கண்ணுக்குப் பன்னி ரண்டுக்குமேற் புலப்படுவதுண்டு. அதன்வடபுறமாக மேல்புறமா யிருப்பது ஒளியுடன்றோன்றும். அதனை ஐரோப்பியர் அல்டே பிரான் எனவழங்குவர்.

மிருகசீரிஷம் என்பது உரோகிணிக்குக் கிழக்கில் திருவாதி ரைக்கு மேற்கிற்றோற்றுவது.

திருவாதிரை அதற்குப் பக்கத்திற்றோற்றும். ஆவணி புரட்டாசி மாதங்களில் வைகறையிற் கிழக்கிலும் தைமாதத்தில் மேற்கிலுந் தோன்றும். இதற்கு முரோகிணிக்கும் மேற்கில் ஒரு பிரகாசமுள்ள நக்ஷத்திரந்தோன்றும். இவைகட்குத் தெற்கே மத்தியில் 3 நக்ஷத் திரங்கள் பிரகாசத்தோடு தோன்றும். இவைகளைச் சேர்த்துப் பார்ப்போமாயின் இவைகட்குத் தெற்கிலும் முற்கூறிய திருவாதி ரைக்கும் அதற்கடுத்ததற்கும் நேராயும் இரண்டுநக்ஷத்திரங்கள்புலப் படும். இவைகளெல்லாஞ் சேர்ந்து ஏரியனென்று சொல்லப்படும் இந்த நக்ஷத்திரக்கூட்டம் தோன்றாததேசமில்லை.

புனர்பூசத்தைப்பற்றி முன் கொஞ்சம் சொல்லப்பட்டிருக்கிறது. மேலே ஏரியனில் மூன்று நக்ஷத்திரங்கள் மத்தியிலிருப்பதாகக் கூறியுள்ளோம். அவை முன்னமே சொல்லப்பட்ட மிருகவியாதனைப் புலப்படுத்தும். அதற்குக் கிழக்கே சமீபத்திலொன்று தோன்றும். அதோடு வடக்கிற் பார்ப்போமாயின் நடுவிலிரண்டு சற்றுக்கிழக்காகத் தோன்றும், அவைகட்கு வடமேற்காகப் பார்ப்போமாயின் இரண்டு தோன்றும். அவைகளையே புனர்வசுவென்கின்றனர். மத்தியிற்றோன்றுவதற்குக் கானிஸ்மைனர் அல்லது சிறுநாய் என்றும், புனர்வசுவிற்றோற்றும் முதற்கு காஸ்டர் என்றும் கீழிருப்பதற்கு பொல்லியூக்ஸ் என்றும்பெயர். இந்நட்சத்திரங்களாறும் சித்திரைமாதமுதலில் மேற்கில் சூரியாஸ்தமனமாகும் போதே வெகு தெளிவாய்ப் புலப்படும். புரட்டாசி மாதத்திற் காலையிற்றெளிவாய்த்தோற்றும். தை மாதத்தில் உச்சியில் அந்திக்காலத்திற்றோன்றும்.

பூசமிதற்குக்கீழ் அதிக ஒளியின்றித் தோற்றுவது. ஆயிலியம் நான்கு நக்ஷத்திரங்கள் அம்பிபோல் சதுரப்பாடுடையதாய்த் தோற்றும்.

மகம் நான்கு நக்ஷத்திரங்கள் படிப்படியாகத் தோற்றும். மாசி மாதத்திற் பூர்ணசந்திரன் இதனிடையே செல்லுகின்றது. சிம்மராசி ஆரம்பமாவதாலிதற்குச் சிம்மமென்றே ஐரோப்பியர் பெயரிட்டிருக்கின்றனர். இதனின் நடுவிற் பிரகாசிப்பதற்கு ரெகுலியஸ் என்று பெயர். இது சித்திரை மாதத்தில் அந்திக்காலத்தில் உச்சியிற் புலப்படும். இதற்குக் கீழ்புறம் உத்திரம் இரண்டிரண்டாகச் சமனுகக் கட்டிற்காற்போன்று தோன்றும். கீழ்த்தோன்றும் பிரகாசமான நக்ஷத்திரத்திற்கு டெனபோலாவென்று பெயர்.

இலக்கணவிளக்க பரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

ஸ்ரீ:

*வெள்ளூர்ச் சாசநங்கள்

IV.

நடு நக்கர் கோவில்

அம்மன் ஸந்நிதித் தெற்குச்சுவர் கீழோரம்.

ஜடாவர்மன் வீரபாண்டியனின் 3-வது ஸ்ரீ.

1. ஸ்வஸ்திஸ்ரீ । கோச்சடைய பன்மரான திரிபுவன சக்கரவர்த்தி கள் ஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு மூன்றாவது திரு வழுதி வள

2. நாட்டு வெள்ளூரான மதுரோதயபுரத்து நாயனார் நக் காண் டார் கோயில் சிவப்பிராமணரோம் காடுவெட்டிகள் அகம்படி

3. யிலதிணகயன அகத்தி அ (முத) நாராயண விழுப்பரையனுக்கு பிடிபாடு பண்ணிக்குடுத்த பரிசாவது நாயநார் திரு நந்தவன திருப்பை ?

4. குடையில் நீர்க்குறை பூப்படாமல் இறைத்து பயிர் குறை வறச் செ (ய்து) கொடுப்போம் ஆகவும் இப்படி சம்மதித்து இவன் பக்க

5. ல் கொண்ட அச்சு ச—, இவ வச்சு பொலியூட்டு கொண்டு சன்திராதி (த்த) வர் (ரை) செல்வதாக பிடிபாடுபண்ணிக் குடுத்தோம்

6. சிவப்பிராமணரோம் அமண (?) நாராயண விழுப்பரையனுக்கு.

N. B. அச்சு—பாண்டியரது பொன் நாணயம்.

---

* எமது சிநேகிதர் மகா-ா-ா-ஸ்ரீ T. A. கோபிநாதராயரவர்கள் அபிப்பி ராயப்படி நெடில், ஒற்று அடையாளங்களிட்டுச் சுலபமாய் வாசிப்பதற் கநுகூல மாயிருக்கும்படி எழுதப்பட்டிருக்கிறது.

V.

ஷடி கோவில்—தாம்ர சாசநம்.

வீரபாண்டியன் காலம்.

(இது ஒரு அடி நீளம் அரையடி யகலமுள்ள ஒரு கனத்த செப்புத் தகட்டி லெழுதப்பட்டுளது. தலைப்பக்கம் விமாநம்போன்ற அநேகம் வளைவுகளுள்ளது. கணபதி சிவலிங்கம், அம்பாள் ஆகிய மூன்றுருவங்கள் தலைப்பி லெழுதப்பெற்றுள்ளது. சாலிவாகந சகாப்தம் 855-க்கு மேல் செல்லாநின்ற கொல்லம் 109-ம் ஆண்டி லெழுதப்பட்டதாகக் காணப்பட்டிருக்கிறது. ஆகவே 979-வருஷங்களுக்கு முன்னெழுதப்பட்டதாகத் தெரிகிறது. இது மிகவும் அசம்பாவிதம். அதிலுள்ள எழுத்தைப் பார்க்கும்போது 200, 300-வருஷங்களுக்கு முற்பட்டதாயிராதென்று நிச்சயமாய்த் தெரிகிறது. ஆகவே ஏதோ காரியங்களை உத்தேசித்துக் கற்பிதமாய்ச் செய்துகொண்டதென்று தோன்றுகிறது. ‘நமக்கு நித்யபூசைக்கு’ என்று சுவாமியின் வாக்காக எழுதப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கது. ஆயினும் விவேகிகள் பகுத்தறிந்துகொள்ளும் பொருட்டுக் கீழே பதிப்பிக்கிறோம். இச்சாசநத்தை நமது பார்வைக்குத் தந்ததற்காக, தாலுக்போர்டுமெம்பரும், வேளூர் கிராமமுனிசிபும், ஷடி கோவில் தருமகர்த்தர் ஸ்தலத்தாரும், ஷடியூர் முதல்மரியாதைக்காரரும் நமது அன்பருமாகிய ம-ா-ா-ஸ்ரீ ஆ. சங்கரலிங்கம் கவிராயரவர்களுக்கு, நன்றியறிதலுள்ளவராயிருக்கிறோம்.)

முன்பக்கம்.

(1) உ ஸிவகுருவெ எற்ற த்ரிலோக்கிய நிர்மாணவலம் (2) ஸார காரணான் ஸ்வஸ்திஸ்ரீ ஸாலிவாகன ச (3) காப்தம் ௮௱௫௰௫-க்கு மேல் செல்லாநின்ற கொல் (4) லம் ௱௯ வது விசைய வரு தைமீ உயகவ ஆதித்தி (5) வாரமும் பூர்வபக்ஷத்து பஞ்சமியும் அஸ்த நக்ஷத்ர (6) மும் ஸிவநாமயொகமும் ஸிம்மகரணமு(ம்) (7) ஸாஹயொம ஸாஹகரணமு(ம்) பெற்ற ஸாஹதி (8) னத்தில் ஸ்ரீஜய திருவழுதி வளநாட்டில் ஜருதா (9) மெதஜாந வேளூரில் நயினர்

[Grantha] (10) நயினர் சகாதனம் ஸ்ரீ[Grantha] (11) [Grantha] பாதாளவிபாடன் திசைவெட்டிகண் (12) டான் [Grantha] [Grantha] ஆக நம (13) க்கு [Grantha] பூசைக்கும் [Grantha] நடக்கும்படிக்கு (14) நமக்கு விட்டுத்தந்த [Grantha] வேளூர் பெருநா (15) ங்கெல்கையாவது கீழ் எல்கை தென்மடல் (16) லோடிய ஓடைக்கும் வெயிலுகந்த அய்யனர் (17) கோவிலுக்கு மேற்கு; தென் எல்கை அழகி (18) ய கூத்தர் திருவிளையாட்ட எல்கைக்கு வடக்கு; மே (19) ல் எல்கை [Grantha] எல்கை (20) க்கும் ஒழுகு பரும் புக்கும் கிழக்கு; வட எல்கை [Grantha] (21) [Grantha] நயிக்கும் தெக்கு ஆகப் பெருநாங்கெல்கை (22) க்குள்ப் பட்ட அக (ப்) பத்தில் உள்க் கிடை ா (?) அன்பது (23) மா நிலமும் புனல்க்குளம் நஞ்சை புஞ் சை (24) சொன்ன [Grantha] (?) பலபட்டடை தோட்டக்கடமை புதை (25) யிலைக கடமை கொழு (......) டு கடமை வெர (?) கட—(26) மகட் டுக் கடமை ஆயம் ஊத்தைப்பாட்டம் உலா (27) வு காட்சி ஈழுவர் ஆனிவட்டம் மார்களி (?) வட்டம் ப (28) ள் வரி சனவரி குளம்பாசி விலை சகலபல (29) [Grantha]யில் உள்ள நெல்வகை பணவகை முதலாகி (30) ய முதலும் [Grantha] யொ (31) [Grantha] மாக [Grantha] வீர[Grantha] (32) [Grantha]ல் பூசை [Grantha] விட்டுத்தந்தபடி (33) யினுலே [Grantha] ஸிவ [Grantha] (34) [Grantha]யாருக்கு [Grantha] (35) [Grantha]

பின்பக்கம்

[Grantha] உள்ளவரையும் இந்த (36) [Grantha]த்தை கு (ர்) ஒருதர் பரிபாலனம் பண்ணு (37) வார்களோ [Grantha]க்கு [Grantha] (38) [Grantha] உண்டாவதாகவும் [Grantha]

A. M. சடகோபராமாநுஜாசார்யன்,

திருச்சிராப்பள்ளி நேஷனல் ஹைஸ்கூல்.

பக்திவைபவம்.

(எO-ஆம் பக்கத்தொடர்ச்சி)

இவ்விஷயத்தைப்பற்றி அத்வைத ஸித்தாந்த மஹாபாஷியகாரர் என்ன சொல்லுகிறார் என்று அறிய முயலுவோம். அத்வைத ஸித்தாந்தம் துவைதமத ஸித்தாந்தத்தின்படிக்குள்ள எல்லா அபிப்பிராயங்களையும், மேலான பதவியைப்பற்றி அடையும் சர்வாபீஷ்டங்களையும் உள்ளபடி ஒத்துக்கொள்வதோடுகூட தெய்வீகமான புருஷர்கள் அடையும் உன்னத கதியை ஒத்துத் தன்னுடைய முடிவான தீர்மானத்தை எவ்விதம் காட்டுகிறதென்று பார்ப்போம். எவர்கள் மோக்ஷத்தை அடைந்தபிறகுங்கூட ஜீவாத்ம மனோ நிலைமையை வைத்துக்கொள்ள இச்சித்துப் பரமாத்மாவினின்றும் பிரத்தியேகமாகவிருக்கும் மனோநிலைமையை விரும்புகிறார்களோ அவர்கள் தங்கள் அபீஷ்டத்தை யடையவும், ஸகுணப்பிரம்மத்தின் ஆநந்தத்தை யநுபவிக்கவும் சமயங்கள் வாய்க்க இடமுண்டு. இவர்கள்தான் பாகவதபுராணத்தில் அடியில் வருமாறு சொல்லப்படுகிறார்கள். "ஓ இராஜனே எவர்களுடைய இன்பம்பரமாத்வானிடத்தில்தானே இருக்கிறதோ, எவர்களை விட்டு எல்லாப் பந்தங்களும் நீங்கினவோ அப்படிப்பட்ட ஞானிகள் கூடச் சர்வாந்தர்யாமியான பகவானை பக்தியின்பொருட்டேபக்திசெய்யும்படியான அப்பேர்க்கொத்த மகிமையுள்ள குணங்கள் லோகநாதனுக்கும் உண்டு." இவர்கள்தான் இந்த ஜன்மத்தில் பிரகிருதியோடு பரிபூர்ணமானபிறகு மறு ஜன்மத்தில் லோகாதிபதிகளாகப் பிறக்கிறார்களென்று சாங்கியர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இவர்கள் ஒருவரும் ஈசுவரனை பகவானுக்குச் சமானமாகிறார்களில்லை. எங்கு சிருஷ்டியாவது சிருஷ்டி வஸ்துவாவது, சிருஷ்டிக்கிறவனாவது இல்லையோ, எங்கு அறிவாவது, அறியப்படும் விஷயமாவது அறியப்படுகிறனாவது இல்லையோ எங்கு நானாவது நீயாவது அவனாவது இல்லையோ எங்குச் செய்பவனாவது, செய்யப்படும் வஸ்துவாவது சம்பந்தம் ஆவது இல்லையோ அப்படிப்பட்ட நிலைமையை அடைகிறவர்கள் அங்கு யார் யாரைப் பார்க்கிறது யார் யாரால் பார்க்கப்படுகிறான். அப்படிப்பட்ட புருஷர்கள் எல்லாவற்றையும் கடந்திருக்கிறார்கள். அவர்கள் மனம்

வாக்குக்கு அப்புறம் போயிருக்கிறார்கள். இதுவல்ல இதுவல்ல என்று கண்டுபிடிக்கும் சச்சிதானந்த நிலைமையை அடைகிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட நிலைமையை அடையமுடியாதென்றாவது, அடையமாட்டோம் என்றாவது சொல்லுகிறவர்கள் பிரகிருதி, ஜீவன் இவ்விரண்டிலும் அந்தர்யாமியான ஈசுவரன், என்ற மூவகைத்தோற்றங்கள் ஒன்றாயிருக்கிற பிர்ம்மத்தில் நின்று தோன்றும் என்பார்கள். ஆனால் பிரஹலாதாழ்வான் தன்னைத்தான் மறந்தபோது அவன் இந்தப் பிரபஞ்சத்தையாவது அதன் காரணத்தையாவது காணவில்லை. அவனுக்கு எல்லாம் நாம ரூபத்தினால் பேதிக்கப்படாத ஒரு அநந்தமான வஸ்துவாக இருந்தது. தான் பிரஹலாதன் என்ற ஞாபகம் வந்தவுடனே அவனுக்கு முன்னால் பிரபஞ்சமும் அநந்தானந்த குணங்களுக்கு எல்லாம் நிதியான பிரபஞ்ச நாயகனும் இருக்கக்கண்டான். பிரம்மானந்தத்தோடே கூடின கோபிகைகளும் அம்மாதிரியே இருந்தார்கள். அவர்கள் தங்கள் சரீரத்தையும் ஜீவாத்மாவையும் மறந்திருந்த பரியந்தம் அவர்கள் எல்லோரும் கிருஷ்ணனாக இருந்தார்கள். அவர்கள் மறுபடியும் அந்த ஒருவனை பூஜிப்பதற்கு நினைக்க ஆரம்பித்தவுடனே அவர்கள் மறுபடியும் கோபிகைகளாக ஆனார்கள். அந்த க்ஷணமே கோபிகை களுக்கு ஸாக்ஷாத் மன்மதனுக்கெல்லாம் மன்மதனான திவ்ய சரீரத்தோடே, பீதாம்பர வஸ்திரத்தோடே கழுத்தில் அலங்காரமான மாலையோடே புன்சிரிப்போடு கூடின செந்தாமரை முகத்தோடே கிருஷ்ணபகவான் பிரசன்னமானார் என்பதைக் கவனிக்க வேண்டும்.

இப்பொழுது சங்கரர் சொல்லுவதைக் கவனிப்போம். ஸகுணப்பிர்ம்மத்தைப் பூஜிப்பதனால் தங்கள் சொந்த ஜீவாத்ம மனோநிலையை வைத்துக்கொண்டு பரமாத்மாவுடன் சாயுஜ்யபதவியை அடைகிறவர்களின் மகிமை அநந்தமாயுள்ளதா இல்லாததா? இந்த சந்தேகம் ஏற்படுவதற்கு அடியிற்கண்ட ஒரு வாதம் சொல்லக்கேட்கிறோம். அவர்களின் மகிமை அநந்தமாயுள்ளனவாக இருக்கவேண்டும் எனெனில் "அவர்கள் தங்கள் சுவராஜ்யபத்தை அடைகிறார்கள். அவனுக்குச் சகல தேவதைகளும் பூஜைசெய்கிறார்கள். அவர்களுடைய அபீஷ்டங்கள் எல்லா உலகங்களிலும் பூர்த்திசெய்யப்படுகின்றன" என்கிற சுருதிவாக்கியங்கள் கூறுவதினால் ஆதரிக்கப்படுகிறது. இதற்குப்

பிரதியுத்தரமாக, "பிரபஞ்சபரிபாலன சக்தியைத்தவிர என்று" வியாசபகவான் எழுதுகிறார். பிரபஞ்சசிருஷ்டி முதலான சக்தி நீங்கலாக மற்ற அணிமா லகிமா முதலான அஷ்டசித்திகளைப் போன்ற சக்திகள் மோக்ஷத்தை யடைந்தவர்களால்அடையப்படுகின்றன. பிரபஞ்ச பரிபாலன சக்திமட்டில் நித்தியமாயுள்ள பரிபூரணனான ஈசுவரனுக்கே சொந்தமானது. ஏன்? பிரபஞ்சசிருஷ்டி முதலான காரியங்கள் அவனுக்கே உரியதெனச் சுருதிகள் சொல்லுவதாலும் எந்தவிடத்திலும் மோக்ஷத்தையடைந்தவர்கள் பிரபஞ்சசிருஷ்டி சக்தியை அடைவதாகச் சொல்லப்படாதிருத்தலுமே சான்றாகும், பரமாத்மா மட்டிலும் பிரபஞ்சத்தைப் பரிபாலனஞ் செய்யுந் தொழிலுடையவன். சிருஷ்டி முதலான காரியங்களைச் சொல்லும் வேதவாக்கியங்கள் எல்லாம் அவனையே குறித்துக் காண்பிக்கின்றன. எப்பொழுதும் பரிபூரணமாயுள்ளவன் என்கிற விசேஷணமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அணிமா முதலான சித்திகளும் பகவானைத்தேடிக் கண்டுபிடித்த பிறகு தான் உண்டாவதாக வேதவாக்கியங்கள் சொல்லுகின்றன. ஆகையால் மோக்ஷத்தையடைந்தவர்களுக்கு பிரபஞ்சபரிபாலனசக்தியே இல்லை. இதுவுமல்லாமல் அவர்கள் தங்கள் ஜீவாத்மமனோ நிலைமையை வைத்துக்கொள்ளுகிற காரணத்தை முன்னிட்டே அவர்களின் மனோ இஷ்டங்கள் மாறக்கூடியதும் ஸாத்தியம். அதனால் ஒருவன் சிருஷ்டிக்கவேண்டு மென்கிற மனோ பீஷ்டத்தைக்கொண்டால் வேறொருவன் ஸங்காரம் செய்யவேண்டுமென்கிற மனோபீஷ்டத்தைக் கொள்ளுவதும் சாத்தியம். இவ்விதமாக மோக்ஷத்தையடைந்தவர்களின் ஜீவாத்ம மனோநிலைமை மாறுபட்டுக் கொண்டிருப்பதைப் போக்கடிக்கச் செய்யும் ஒரே வழி எதுவென்றால் எல்லாமனோபீஷ்டங்களையும் ஒன்றுக்குக் கீழ்ப்படுத்தி நடக்கும்படி செய்வதுதான். ஆகையால் மோக்ஷத்தை யடைந்தவர்களின் மனோபீஷ்டங்கள் பிரபஞ்சபரிபாலனஞ் செய்யும் ஏகநாயகனான பரமாத்மாவின் இஷ்டத்துக்குக்கீழ்ப்பட்டதாக அதாவது பரமாத்மாவின் ஆஞ்ஞையின் மேல் நடப்பதாகவிருக்கிறது என்பதுதான் முடிவான தீர்மானம்.

இந்தச்சூத்திரத்திற்கு மஹாபாஷியகாரரான இராமாநுஜாசாரியர் வியாக்கியானம் செய்வதில் என்ன சொல்லுகிறார் என்று ஆராய்வோம். பந்தத்தில் நின்றும் விடுபட்டு மோக்ஷத்தையடைந்த ஜீவாத்மாக்கள்

அடையும் சக்திகளில் ஏகமாயிருக்கிற பரமாத்மாவின் ஒப்பில்லாத சக்தியாகிற இப்பிரபஞ்ச சிருஷ்டி முதலான காரியங்களை நடத்திச் சகல புவனங்களுக்கும் தனி நாயகனாக இருக்கும் சக்தியும் அடங்கியிருக்கிறதா? அல்லது அப்படிப்பட்ட சக்தியில்லாமல் மோக்ஷத்தை அடைந்த ஜீவாத்மாக்கள் அடையும் மஹிமையெல்லாம் பரமாத்மாவைப் பிரத்தியக்ஷத்திற்கண்டு ஆனந்திப்பதோடுமட்டும் அடங்கினதா? என்கிற சந்தேகம் ஏற்படுவதால் அதற்கு அடியிற் கண்டபடி ஒரு சம்வாதம் சொல்லக்கேட்கிறோம். "அவன் ஒன்றாயிருக்கிற பரிசுத்தமான பரமாத்மாவுடன் சாயுஜ்ஜிய பதவியை யடைகிறான்." என்று சுருதி சொல்லுகையாலே பந்தத்தில் நின்றும் விடுபட்டு மோக்ஷத்தை யடைந்தவன் இப்பிரபஞ்ச நாயகனாகவும் ஆகிறான் என்று காரண காரியத்தோடே நம்பும்படி இருக்கிறது. ஏனென்றால் சுருதிகள் சொல்லுகிறபடி அவன் சாயுஜ்யபதவியை யடைகிறதோடேகூடச் சர்வாபீஷ்டங்களையும் அடைந்தவனாகிறான். இன்னும் இதிலிருந்து பார்ப்போமானால் சாயுஜ்ய பதவியும், சர்வாபீஷ்டங்களை அடைந்திருக்கும் தன்மையும் பரமாத்மாவின் ஒப்பில்லாத சக்தியாகிற இப்பிரபஞ்ச பரிபாலகனாக இருக்கும் சக்தியில்லாமல் அடையப்படமாட்டா. ஆகையால் சர்வாபீஷ்டங்களையும் சாயுஜ்ய பதவியையும் பரமாத்மாவுடன் அடைவதற்கு இம்முழுப் பிரபஞ்சபரிபாலன சக்தியையும், மோக்ஷத்தை அடைந்தவன் அடைகிறான் என்று நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியது கட்டாயமாக விருக்கிறது என்று இவ்விதமாக வாதிப்பதற்கு எதிராக மோக்ஷத்தை யடைந்தவன் பிரபஞ்சபரிபாலன சக்தியைத் தவிர மற்றெல்லா சக்திகளையும் அடைகிறான் என்று நாம் (இராமாநுஜாசாரியர்) பதில் சொல்லுகிறோம். பிரபஞ்சபரிபாலனம் என்பது பரமாத்மாவின் யதார்த்த சுபாவத்தை மறைக்கின்ற எல்லாவற்றில் நின்றும் விடுபட்டவர்களாய் பரப்பிர்ம்மத்தைச் சதாகாலமும் பிரத்தியக்ஷத்தில் சேவித்துக்கொண்டு பிர்மாநந்தத்தை யனுபவிக்கும் மோக்ஷத்தையடைந்தவர்களைத் தவிர மற்ற எல்லாச் சேதனுசேதன வஸ்துக்களின் ரூபம் ஜீவன் அபீஷ்டங்கள் இவைகளை நடத்துவதுதான். இது "எவனிடத்திருந்து சகல வஸ்துக்களும் உதித்து எவனால் ஜீவிக்கின்றனவோ வெவனிடத்திற்கு அவைகள் மறுபடியும் திரும்பிச் செல்கின்

றனவோ அப்படிப்பட்டவனை விசாரித்துப்பார். அவனே பிரப் பிரமம்" என்கிற சுருதி வாக்கியத்தினுல் ரூபிக்கப்படுகிறது. பிர பஞ்ச பரிபாலனஞ்செய்யும் இப்படிப்பட்ட குணம் மோக்ஷத்தை அடைந்தவர்களுக்கு சாதாரணமாய் உள்ள குணம் என்ருல் பிரபஞ்ச பரிபாலனத்தின் மூலம் அவனை நிரூபித்துக்காட்டும் இந்தச் சுருதி வாக்கியம் பிரமத்தின் இலக்ஷணத்தை சொல்லுவதாக மாட்டாது. அசாதாரணமான வஸ்துவின் இலக்ஷணமட்டிலும் அன்றே, விசே ஷித்துச் சொல்லவேண்டியிருக்கின்றது. ஆகையால், "என்னுடைய பிரியமுள்ள குழந்தாய்! ஆதியில் தனியே இரண்டற்றதான ஏக வஸ்து இருந்தது. அதுவே அநேகம் ஜீவராசிகளை உண்டுபண்ணக் காரணமாயிருக்க நிச்சயித்தது. அந்த ஒன்றிலிருந்து இப் பிரபஞ்ச விரிவு உண்டாயிற்று. அவன்பார்த்து உலகத்தை உண்டுபண்ணி னுன். அவன் பிற்பாடு பிரபஞ்சத்தை வெளிப்படுத்தினுன். நாரா யணன் மாத்திரமே ஆதியானவன். பிர்ம்மா, ஈசானன், பிருதிவி, நக்ஷத்திரங்கள், ஜலம், அக்கினி, சோமன், சூரியன் இவை முதலிய ஒன்றுமில்லை. அவன் தான்மட்டிலும் தனியேயிருப்பதால் இன்பம் அடையவில்லை. அவன் தன்னுடைய தியானத்திலிருந்து ஒரு புத் திரி தசேந்திரியங்கள் முதலானவற்றையுங் கண்டான். பூமியிலிருந்து கொண்டே பூமியிலிருந்தும் பிரத்தியேகமாய் இருக்கிருன்" என்று சொல்லும் இவைகளையொத்த சுருதிவாக்கியங்கள் பிரபஞ்சபரிபால னத் தொழிலுக்குக் காரணபூதன் பரமாத்மாவாக இருக்கிற ஏக வஸ்துவைச் சொல்லுகிறது. பிரபஞ்சபரிபாலன விவரங்களை விஸ் தாரமாக எடுத்துச்சொல்லும் சுருதிவாக்கியங்களில் பிரபஞ்ச பரி பாலன சக்தி மோக்ஷத்தையடையும் ஜீவாத்மாவுக்கும் உண்டு என்று எங்கும் சொன்னதாகக் காணேம். பிரபஞ்ச பரிபாலன சக்தி மோக்ஷத்தை யடையும் ஜீவாத்மாவுக்கும் உண்டு. என்று வேதப் பிராமணங்கள் இருப்பதாக மேற்சொன்ன அபிப்பிராயத்திற்கு விரோ தமாகப் பிரத்தியக்ஷப் பிரமாணத்துடன் சொல்லும் பக்ஷத்தில் அப் பேர்க்கொத்த வேதவாக்கியங்கள் கீழ்ப்பட்ட ஜீவாத்மாக்களாகிற மோக்ஷத்தையடைந்தவர்களின் மஹிமையைச் சொல்லுவதாக இருக் கிறது. என்று அடுத்த சூத்திர பாஷியத்தில் இராமாநுஜாசாரியர் சொல்லுகிருர். இதுவும் சுலபமாக வித்தியாசம் கண்டுபிடிக்க ஒரு

வழியேயாகும். இராமாநுஜாசாரியருடைய சித்தாந்தம், எல்லாம் ஒன்று என்று ஒப்புக்கொண்டாலும் அப்படி எல்லாம் சேர்ந்த ஒன்றினுள்ளே நித்தியமான பேதங்களும் இருக்கின்றன. ஆகையால் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் மிகவும் தெளிவாய் வித்தியாசம் சொல்லி நிரூபிக்க மிகவும் சுலபமாக இருந்தது.

மேற்கண்ட காரணகாரியத்தை முன்னிட்டு பிரமத்தினிடத்தில் பக்தியை அவனுடைய சகுணரூபத்தில் மாத்திரம் செலுத்தமுடியும்

"அவ்யக்தா ஹி கதிர்து:கம் தேஹவத்பிரவாப்யதே"

என்கிறபடி பரிபூரண வஸ்துவினிடத்தில் பற்றுதலுள்ள மனதையுடையவர்களுக்கு மார்க்கம் மிகவும் கஷ்டமாக இருக்குமா? நமது சுபாவமாகிற பிரவாகத்தில் பக்தி தடையில்லாமல் மிதந்து செல்ல வேண்டியிருக்கிறது. மானிடஸ்வரூபகுணமில்லாத பரப்பிர்ம்மத்தை நெஞ்சினால் நினைக்கமுடியாது என்பது உண்மையேயாகும். ஆனால் நாம் அறிகிற ஒவ்வொரு வஸ்துவும் அவ்விதமாகவே இருக்கவேண்டுமென்பது உண்மையில்லை. மனோதத்துவ சாஸ்திரத்தில் மகா நிபுணரான பிரசித்திபெற்ற கபிலபகவானனவர்" அந்தர் முகமாயாவது, "பஹிர்முகமாயாவது (மனதினாலாவது, கண்களினாலாவது) பார்க்கப் படும் பதார்த்தங்களின் சேர்க்கை வஸ்துக்களில் மனிதனுடைய மனச்சாக்ஷியும் ஒன்று" என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார். நமது சரீரம் முதல் கடவுள்வரை நாம் பார்க்கும் ஒவ்வொரு வஸ்துவினிடத்திலும் இந்த மனச்சாக்ஷியும் வேறொன்றும் சேர்ந்திருக்கிறதென்று நாம் காணலாம். இப்படிப்பட்ட இன்றியமையாத சேர்க்கையைத் தான் "நிஜமானது" என்று நாம் சாதாரணமாய்ச் சொல்லுகிறோம். மனிதனுடைய மனதினால் அறிய சாத்தியமுள்ள எல்லா உண்மைப்பொருளும் இந்த விதியின்படியே எப்பொழுதும் சத்தியமாக இருக்கிறது. ஆகையால் ஈசனை மானிட சுரூப குணமுள்ளவனாக இருக்கிற காரணத்தை முன்னிட்டுத், தத்துவப்பொருளல்ல என்று சொல்லுவது முழுமூடத்தனமேயாகும். உண்மை என்கிற பதத்தினால் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் கொள்ளப்படும் எல்லா அபிப்பிராயமும் ஈசுவரபாவத்தில் அடங்கியிருக்கிறது. பிர

பஞ்சத்திலுள்ள மற்றெல்லாவற்றையும்போல ஈசுவரனும் உண்மையே என்பதுதான். "நீ ஆண்டான் நான் அடிமை" என்னும் நிலையைப் பின்பற்றி நிச்சலமாயும், நிர்மலமாயும், சாந்தமாயும் இருந்து பரிபக்குவம் அடையும் மனிதனுக்குப் பிர்ம்மசாக்ஷாத்காரம் கைகூடுகின்றது. ஆசையெனும் சண்டமாருதத்தால் இருதயாகாசம் மோதப்பட்டிருக்கிறவரையில் ஈசுவர பிரதிபிம்பமாவது ஈசுவர தரிசனமாவது உண்டாவது அசாத்தியம். நன்றாய் மலர்ந்த மலரின் நறுமணத்தைக் காற்றுக்கொண்டு நாற்றிசைகளிலும் வீசும்பொழுது தேனீ தானகவே அம்மலரிடம் வருகின்றது. தித்துப்புப் பண்டங்கள் வைத்திருக்கும் இடத்திற்கு எறும்புகள் தாமாகவே வந்துசேர்கின்றன. தேனீயையாவது, எறும்பையாவது ஒருவரும் வருந்தியழைக்கவில்லை. அதுபோலவே ஒருவன் பரிசுத்தனுகிப் பூரண நிலையடையும்பொழுது அவனது சீலத்தின் திவ்வியப் பிரபாவத்தினுலே பகவான் ஞாபகமும் பரலோக ஞாபகமும் உண்டாகின்றன. அரசனது தயவால் ஏழை தனிகனுவதுபோல் பகவானது திருவருளால் அஷ்டைசுவரியமும் நிறைந்த பேரின்ப மோக்ஷத்தையடைகின்றுன்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழாஅ ரெனின்.

வி. தி. ஸ்ரீநிவாஸையங்கார்,

தமிழ்ப்பண்டிதர்.

INSECT PESTS.

பயிர்களுக்கு நஷ்டத்தை உண்டுபண்ணும் பூச்சிகளைப்பற்றி.

எல்லாவித பயிர்களும் பூச்சிகளால் பீடிக்கப்படக்கூடியவைகள். அப்பூச்சிகள் உருவத்தில் சிறியவைகளாகவிருந்தாலும் எண்ணிக்கையில் ஜாஸ்தியாயிருந்து பயிர்களுக்கு அதிக நஷ்டத்தை உண்டுபண்ணுகின்றன. மழையின் ஒரு துளி சிறியதேயாயினும், அநேக மழைத்துளிகள் சேர்ந்து பூமியில் விழும்போது வெள்ளம் தோன்றி அதிக நஷ்டத்தையும் உண்டுபண்ணும். பூச்சிகள் தோன்றும்போது அதுபோலவே நேரிடுகிறது ஒரு பூச்சியானது அதின் ஆயுள் முழுவதும் சில இலைகளைத்தான் தின்னும். ஆனால் ஒரு பயிரில் ஏராளமான பூச்சிகள் விழுமானால், பயிரின் ஒவ்வொரு இலையையும் தின்று மகசூலை நஷ்டமடையச் செய்யும். ஒவ்வொரு குடியானவனும் தன்னுடைய பயிர் பூச்சிகளினால் பீடிக்கப்பட்டு தான் நஷ்டமடைந்துபோவதை அறிந்திருப்பான். அவ்வித நஷ்டத்தை எவ்விதமாய் தடுப்பது என்பதை அறியவும் பலமுறை விரும்பியிருப்பான். பூச்சிகளில் எல்லா விதங்களைப்பற்றியும், முக்கியமாய் பயிர்களுக்கு கெடுதலையுண்டுபண்ணும் பூச்சிகளைப்பற்றியும், செவ்வையாய் ஆராய்ந்து பரிசோதனை செய்வதற்காக கவர்ன்மெண்டார் ஒரு உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். எந்த நிலச்சுவான்கள் அல்லது குடியானவர்களுடைய பயிர்கள் பூச்சிகளால் பீடிக்கக்கூடிய நிலைமையில் அல்லது நஷ்டப்படுத்தப்பட்டாவது இருக்குமானால் அப்போது அவர்கள் இந்த ஆபீசுக்கு எழுதி அவருடைய ஆலோசனையைக் கோரவேண்டும். ஒவ்வொரு விதப் பூச்சியையும் நிவர்த்திக்க முறைகள் சொல்லுவது இப்போது சாத்தியமில்லையென்றாலும், பூச்சிகளில் அநேகத்தை நிவர்த்திக்க மார்க்கங்கள் சொல்லக்கூடும். பயிர் ஜாஸ்தியாய் பீடிக்கப்பட்டிருந்தால், அந்த சந்தர்ப்பத்தில் பயிரையும் சாகுபடி முதலியவற்றையும் நேரில் பார்வையிடவும், அதன் பிறகு பூச்சியின் பாதையை நிவர்த்தி செய்யும்பொருட்டு விஷயம் தெரிந்த ஒரு ஆபீஸரை அனுப்பி உதவி செய்யக்கூடும். நஷ்டத்தை உண்டுபண்ணும் பூச்சிகளை நேரில் பார்வையிடாமல் பொதுவாய் ஆலோசனை சொல்லுவது அசாத்தியம். "என்னுடைய

நெல்பயிர் பூச்சிகளால் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது. தயவுசெய்து அதை நிவர்த்திக்க முறைகள் தெரியப்படுத்தப்படவேண்டும்" என்று எழுதுவது உபயோகமில்லை. ஏனெனில் நெல் பயிரை சேதப்படுத்தக்கூடிய பூச்சிகள் குறைந்தபட்சம் 12-தினுசுகள் இருப்பதாலும், அவைகளில் இன்னதுதான் இந்த சந்தர்ப்பத்தில் நஷ்டத்தை உண்டு பண்ணுகிறதென்பது தெரியாது. பூச்சி யின்னதென்பதை அறியாமல் ஆலோசனை கூறுவதும் அசாத்தியம்.

நஷ்டத்தை உண்டுபண்ணிக்கொண்டிருக்கிற அல்லது உண்டு பண்ணுவதாகத் தோன்றுகிற பூச்சிகளில் சிலவற்றை அனுப்ப வேண்டும். அப்போது எந்தப் பூச்சி நஷ்டத்தை உண்டுபண்ணுகிற தென்பதைக் கண்டுபிடித்து அதை நிவர்த்திப்பதற்கேற்ற முறைகள் சொல்லக்கூடும். அப்பூச்சிகளை உயிரோடிருக்கும்படி ஒரு தகரம் அல்லது மரப்பெட்டியில் கசக்கப்பட்ட காகிதம் அல்லது இலைச்சாகு முதலியவற்றோடும், ஆபீஸரிடம் வந்து சேரும் வரையில் வழியில் ஆகாரமாக உபயோகப்படும்படி அது தின்னக்கூடிய பச்சைத் தட்டை அல்லது தழையையும் கொஞ்சம்போட்டு (unregistered) அன்ரிஜிஸ்டர்ட் தபால் பார்சல் மார்க்கம் அனுப்பவேண்டும். தகரப் பெட்டி கிடைக்காவிட்டால் ஒரு புறம் கணுவுள்ள மூங்கில் குழாய் ஒன்றை தக்கை அல்லது மரத்தால் செய்யப்பட்ட ஆப்பினால் மூடி பூச்சிகளை உயிரோடு அனுப்பலாம். ஆனால் மூடி பலமாகப் போடப் பட்டிருக்கவேண்டும். அவ்விதம் அனுப்பப்படும் எல்லாப் பார்சல் களில் அனுப்புகிறவர்களுடைய பெயரும் முழுவிலாசமும் செவ்வையாய் எழுதப்பட்டிருப்பதுடன், எந்தப் பூச்சியைப்பற்றி ஆலோசனை கோரப்படுகிறதோ, அதைப்பற்றிய முழு விபரங்களடங்கிய ஒரு கடிதமும் இருக்கவேண்டும். அதாவது பிடிக்கப்பட்ட பயிர் நஷ்டத்தின் தன்மையையும் அளவையும், எப்போது முதல் தோன்றிய தென்பதையும், முந்தின வருஷங்களில் அவ்விதமான பூச்சி தோன்றியிருக்கிறதா என்பதைப்பற்றியும் எழுதவேண்டும்.

பூச்சிகளைப்பற்றிய எல்லா பார்சல்களும் கடிதங்களும் கீழே குறிக்கப்பட்டிருக்கிற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

கவர்ன்மெண்ட் என்டமாலஜிஸ்ட், விவசாய காலேஜ்,
கோயம்புத்தூர்.

டி. பெயின்பிரிக்கி ப்ளெச்சர்,
கவர்ன்மெண்ட் என்டமாலஜிஸ்ட்.